# தகவல் பாலம்

## தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

## OUR LADY OF GOOD HEALTH PARISH

Volume 1, Issue 8 October 2019


***PASTORAL STAFF:***

**Fr. Charles W. Collins**
*Pastor*

Maureen Rajadurai
*Secretary*

***MASS SCHEDULE:***

| | |
|---|---|
| **Sunday:** | **12:30 pm & 4:30 pm** |
| **Tuesday & Wednesday:** | **7:30 pm** |
| **First Friday:** | **7:30 pm** |

***OFFICE HOURS:***

| | |
|---|---|
| **Monday:** | **Closed** |
| **Tuesday - Friday:** | **9:00 am – 6:00 pm** |
| **Saturday:** | **9:00 am – 3:00 pm** |
| **Sunday:** | **11 am – 4 pm; 5:30 pm – 7 pm** |


***OUR LADY OF GOOD HEALTH PARISH***

**131 Birchmount Road,**
**Scarborough, ON. M1N 3J7**
***(Birchmount & Danforth Ave.)***


**Phone:** **416-264-OLGH (6544)**
**Fax:** **416-264-6545**
**Email:** **Office@olghtamilparish.com**
**Website:** **www.olghtamilparish.com**


### குருத்துவ வெள்ளிவிழா




எமது முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி கபிரியேல் அருள்நேசன் அடிகளாரின் குருத்துவ வெள்ளிவிழா நன்றித்திருப்பலி **ஐப்பசி 13, ஞாயிற்றுக்கிழமை மாலை 4:30** மணிக்கு இடம்பெறும். இத்திருப்பலியில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

### யாழ் குரு முதல்வரின் வருகையும் வழிபாடுகளும்




**ஐப்பசி 24, வியாழக்கிழமை** மாலை 6:30 மணி தொடக்கம் சிறப்பு நற்செய்தி வழிபாடும் நற்கருணை ஆராதனையும் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெறும்.

**ஐப்பசி 27, ஞாயிற்றுக்கிழமை** மாலை 4:30 மணிக்கு குரு முதல்வர் தலைமையில் சிறப்புத் திருப்பலி இடம்பெறும்.

### முதல் வெள்ளி - நற்கருணை வழிபாடு

மாலை 7:00 மணிக்கு செபமாலையும் 7:30 மணிக்கு நற்கருணை வழிபாடும் தொடர்ந்து திருப்பலியும்




**Give thanks to the LORD, for he is good. His love endures forever.**

## HAPPY THANKSGIVING

வெள்ளி விழா
1994 - 2019

## வாரநாள் திருப்பலிகள்

**செவ்வாய்க்கிழமை:** தூய அந்தோனியார் நவநாள் மாலை 7:00 மணிக்கு செபமாலையும் 7:30 மணிக்கு திருப்பலியும்

**புதன்கிழமை:** சதாசகாய அன்னை நவநாள் மாலை 7:00 மணிக்கு செபமாலையும் 7:30 மணிக்கு திருப்பலியும்

## திருமுழுக்கு அருட்சாதனம்

**பிரதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3:00 மணி (மார்கழி 22, 29, தை 5 நாட்களில் நடைபெறமாட்டாது)**

பெற்றோர்கள் திருமுழுக்கு அருட்சாதன ஆயத்த வகுப்பில் பங்கெடுப்பது முக்கியமானது. ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற முதல் செவ்வாய்க்கிழமைகளில் மாலை 6:00 மணி தொடக்கம் மாலை 7:00 மணி வரை எமது பங்கில் ஆயத்த வகுப்புகள் நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு எமது அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

## ஒப்புரவு அருட்சாதனம்

அனைத்து திருப்பலிகளின் முன்பும் பின்பும் அல்லது முன்னேற்பாட்டுடன் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

## திருமண அருட்சாதனம்

தயவுசெய்து பங்குத்தந்தையை காலம் தாமதிக்காமல் தொடர்பு கொள்ளவும். ஒரு வருடத்திற்கு முன்னர் அறிவிப்பது விரும்பத்தக்கது. ரொறன்ரோ மறைமாவட்டத்தினால் ஒழுங்குசெய்யப்படுகின்ற திருமண ஆயத்த வகுப்புகளில் பங்குபற்றி சான்றிதழைப் பெற்றுக்கொள்வதும் அவசியமானது.

## திருமண ஆயத்த வகுப்புகள்

ஐப்பசி 5 முதல் கார்த்திகை 2 வரை ஐப்பசி 12 தவிர்ந்த ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் எமது ஆலய மண்டபத்தில் காலை 10:00 மணி முதல் மதியம் 1:00 மணி வரை 4 அமர்வுகளாக நடைபெறும். தயவுசெய்து காலம் தாமதிக்காமல் (416) 921-1163 இலக்கத்துடன் அல்லது marriageprep@cfstoronto.com மின்னஞ்சல் முலமாக ரொறன்ரோ கத்தோலிக்க குடும்ப சேவையைத் தொடர்பு கொள்ளவும்.

**ஐப்பசி 5** - சனிக்கிழமை
**ஐப்பசி 19** - சனிக்கிழமை
**ஐப்பசி 26** - சனிக்கிழமை
**கார்த்திகை 2** - சனிக்கிழமை

## முதல் நன்மையும் உறுதி பூசுதலும்

2020 ஆம் ஆண்டில் எமது பங்கில் முதல் நன்மையும் உறுதி பூசுதலும் பெற விரும்புகின்ற பிள்ளைகள் தமது பாடசாலைகளில் நடைபெறவிருக்கின்ற ஆயத்த வகுப்புக்களில் பங்கேற்பது முக்கியமானது. கத்தோலிக்க பாடசாலைகளில் கல்விபயிலாத பிள்ளைகள் பங்கு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

## திருவழிபாட்டுப் பாடல்கள்

எமது பங்கின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழாவின் நினைவாக **பரமனுக்கு பாமாலை III** எனும் திருவழிபாட்டுப் பாடல்கள், புதிய திருப்பலிச் செபங்கள் அடங்கிய நூல் வெளியிடப்படுகின்றது. அதில் இறந்து போன உங்களுடைய பெற்றோர், பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்களின், நண்பர்களின் நினைவாக புகைப்படத்துடன் கூடிய பக்கம் ஒன்றை அந்நூலில் பதிவிட விரும்பினால் பங்கு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

## மரியன்னையின் வணக்கமாதம்

ஐப்பசி மாதம் முழுவதும் உங்கள் வீடுகளில் குடும்பமாக செபமாலை சொல்ல முயற்சி செய்யுங்கள். ஐப்பசி 31, வியாழக்கிழமையன்று மாலை 7:30 மணிக்கு செபமாலை அன்னையின் திருவிழா திருப்பலியில் கலந்து மரியன்னையின் புகழ்பாட அனைவரையும் அழைக்கின்றோம்.

## பங்கின் வளர்ச்சி

தூய ஆரோக்கிய அன்னை பங்கின் எதிர்கால வளர்ச்சி இன்றைய இளையோர், மாணவர், சிறுவர்களின் கைகளில் தங்கி இருக்கிறது. எமது பங்கின் வளர்ச்சிக்கு மொழி எவ்வகையிலும் தடையாக இருக்கக்கூடாது என்பது என் ஆவல். ஆகவே தொடர்ந்து எமது எதிர்கால சமூகமும் படிப்படியாக எமது பங்கின் வளர்ச்சியில் அக்கறையும் பங்களிப்பும் செய்யுமாறு அவர்களை வழி நடத்த வேண்டியது எமது பொறுப்பாகும். நாம் எமது பங்கின் பணிப்பீடத்தை பலப்படுத்துவோம். பங்குச்சபை, பீடப்பணியாளர்கள், வாசகர்கள், நற்கருணைப் பணியாளர்கள், வரவேற்பாளர்கள், பாடகர் குழுவினர், மரியாயின் சேனை, நிதிப்பொறுப்பாளர்கள், உதவியாளர்கள் என்ற பணிகளில் உங்களை இணைத்துக்கொண்டு தூய ஆரோக்கிய அன்னைப் பங்கை வளர்ப்போம்.

**சாள்ஸ் கொலின்ஸ்**
*பங்குத்தந்தை*

## கார்த்திகை மாதம் - இறந்த அனைத்து விசுவாசிகளின் நினைவு

கார்த்திகை மாதம் முழுவதும் இறந்த அனைத்து விசுவாசிகளின் நினைவு கூருமுகமாக ஒவ்வொரு செவ்வாய், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இரவு 7:30 மணிக்கு நினைவுத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

**கார்த்திகை 29, வெள்ளிக்கிழமை** தமிழ் ஆங்கில மொழிகளில் பொது வழிபாடாக இடம்பெறும். இத்திருப்பலியில் உங்களின் உறவுகளுக்காக விசேடமாக மன்றாட தேவையான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலதிக விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.